**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பாலக்கோடு.**

**முன்னிலை** : திரு.G.அஜய் விக்ரிஷ் குமார்.B.B.A.,LLB., (Hons)

குற்றவியல் நீதித்துறை நடுவர், பாலக்கோடு.

**2026-ம் ஆண்டு மே மாதம் 20-ம் நாள் புதன்கிழமை**

**Crl.M.P No.355/2026**

**CNR.No.TNDP05000794-2025**

M.மங்கம்மாள் (வயது 30)

க/பெ. மாரிமுத்து. ........ புகார்தாரர்

/எதிராக/

மாரிமுத்து (வயது 37)

த/பெ. கண்ணு. ......... எதிர்

இம்மனு கடந்த 15.04.2026-ம் தேதி என் முன்னர் இறுதியாக விசாரணைக்கு வந்த போது புகார்தாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.N.சிலம்பரசன்., M.Sc.,B.L., மற்றும் திரு.G.கார்த்திகேயன்,B.Sc.,B.L., அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.R.சின்னதம்பி,B.Sc.,LLB., PGDCo.M., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்டும், வழக்கு ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழக்கும்

**உத்தரவு**

1) மனுதாரரால் U/s.223 of BNSS-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டது.

**2) மனுதாரர் மனுவின் சுருக்கம்**

i) புகார்தாரரும், எதிரியும் கணவன் மனைவி ஆவார்கள் எனவும், புகார்தாரருக்கும், எதிரிக்கும் கடந்த 30.05.2018-ம் தேதியன்று பிக்கனஅள்ளியில் உள்ள சென்றாயசாமி கோயிலில் இரு வீட்டு பெரியோர்கள் முன்னிலையில்

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.20 18:52:15 +0530

திருமணம் நடைபெற்றது எனவும், புகார்தாரரின் பெற்றோர்கள் சீர்வரிசையாக 20 பவுன் நகை, பீரோ, கட்டில் மற்றும் வீட்டு உபயோக பொருட்களை எதிரிக்கு கொடுத்தும், திருமணத்திற்கான அனைத்து செலவுகளையும் புகார்தாரரின் பெற்றோர்கள் ஏற்றுக்கொண்டனர், திருமணத்திற்கு முன்பே எதிரிக்கு காஞ்சிபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் செவிலியராக பணிபுரியும் திலகவதி என்பவருடன் தகாத தொடர்பு இருந்தது திருமணதிற்கு பின்னிட்டு எதிரியின் செல்போன் மூலமாக புகார்தாரருக்கு தெரியவந்தது, மேற்படி தகாத உறவை மறைத்து புகார்தாரரை எதிரி திருமணம் செய்து கொண்டார் எனவும், திருமணத்திற்கு பின்னிட்டு புகார்தாரரும், எதிரியும், எதிரியின் பெற்றோருடன் கூட்டு குடும்பமாக வாழ்ந்து வந்தார்கள், திருமணத்தின் பயனாக புகார்தாருக்கு கடந்த 12.05.2020-ம் தேதியன்று ஜானுஸ்ரீ பெண் குழந்தையும், கடந்த 22.10.2021-ம் தேதியன்று லித்திஸ் என்ற ஆண் குழந்தையும் பிறந்தது எனவும்,

ii) திருமணத்திற்கு பின்வும் எதிரி மேற்படி திலகவதியுடன் தகாத உறவில்தொடர்ந்து இருந்து வந்ததால் புகார்தாரருக்கும் எதிரிக்கும் வீண் சண்டை ஏற்பட்டு வந்தது எனவும், எதிரியும், அவரது குடும்பத்தாரும் புகார்தாரரிடம் வீடு கட்டுவதற்கு பணம் வேண்டும் என்று புகார்தாரரை கொடுமை செய்ததாலும், தொடர்ந்து அடித்து மனதளவிலும் உடலளவிலும் துன்புறுத்தி வந்ததாலும், புகார்தாரார் கடந்த 24.11.2019-ம் தேதியன்று கிருஷ்ணகிரி அனைத்து மகளிர் காவல் நிலையத்திலும், 19.02.2020-ம் தேதியன்று கிருஷ்ணகிரி காவல் கண்காணிப்பாளர் அலவலகத்திலும் 05.12.2021 தேதியன்று மகேந்திரமங்கலம் காவல் நிலையத்திலும், 24.12.2021-ம் தேதியன்று முதலமைச்சர் தனிப்பிரிவிலும், 27.01.2022-ம் தேதியன்று தருமபுரி காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலும் புகார் கொடுத்தார் எனவும், எதிரியின் கள்ள உறவு பழக்க வழக்கத்தாலும் மற்றும் எதிரி புகார்தாரரை வரதட்சணை கோரி கொடுமை செய்ததாலும், புகார்தாரர் தனக்காவும், இளவர்களுக்காகவும் ஜீவானம்சம் கோரி எதிரிக்கு எதிராக இந்நீதிமன்றத்தில் MC No.03/2022-யும் மற்றும் அவரது குடும்பத்ினருக்கு எதிராக இந்நீதிமன்றத்தில் DVC No.01/2023 வழக்கும் நிலுவையில் உள்ளது எனவும்,

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.20 18:52:22 +0530

iii) எதிரி, புகார்தாரருக்கு எதிராக கிருஷ்ணகிரி குடும்ப நல நீதிமன்றத்தில் மணவாழ்க்கை மீட்டமைவு கோரி OP No.188/2022 தாக்கல் செய்து வழக்கு நிலுவையில் இருந்த போது காரிமங்கலம், கொட்டாவூரைச் சேர்ந்த பெருமாள் மகள் சுகஸ்ரீ என்பவரை காதலித்து புகார்தாரரிடம் நடந்த திருமணத்தை மறைத்து புகார்தாரருடன் உள்ள சட்டப்பூர்வமான முதல் திருமணம் நடைமுறையில் உள்ள நிலையில் கடந்த 28.06.2023-ம் தேதியன்று கிருஷ்ணகிரி சென்னம்பட்டி முருகன் கோவிலில் செய்துக்கொண்டு, கிருஷ்ணகிரியில் உள்ள தனியார் விடுதியில் அறை எடுத்து சுகஸ்ரீ என்பவருடன் கள்ள உறவில் இருந்து வந்துள்ளார் எனவும், அதை தொடர்ந்து சுகஸ்ரீயின் தாயார் அவரது மகள் காணாமல் போனது குறித்து காரிமங்கலம் காவல் நிலையத்தில் 28.06.2023-ம் தேதியன்று புகார் கொடுத்ததை தெரிந்துக்கொண்டு 29.06.2023-ம் தேதியன்று கிருஷ்ணகிரி காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் திருமணம் செய்துக்கொண்ட பெண் உடன் சரண்டர் ஆகி பாதுகாப்பு கோரினார் எனவும், அங்கு கிருஷ்ணகிரி அனைத்து மகளிர் காவல் நிலையம் சென்று நிவாரணம் தேடிக்கொள்ளும்படி வாய்மொழி உத்தரவு கிடைக்கப்பெற்றது. பின்னர் இருவரும் கிருஷ்ணகிரி அனைத்து மகளிர் காவல் நிலையம் தஞ்சம் அடைந்தார்கள், அவர்களது விசாரணையில் எதிரி ஏற்கனவே திருமணம் ஆனவர் என்பதும், எதிரிக்கு இரண்டு குழந்தைகள் உள்ளது என்பதும் தெரியவந்தது எனவும், புகார்தாரர் சம்பந்தப்பட்ட அனைத்து விசயங்களையும் மறைத்து சுகஸ்ரீ-யை 2-வது திருமணம் செய்து கொண்டு 28.06.2023 முதல் 29.06.2023 வரை சுகஸ்ரீயுடன் திருமணத்திற்கு அப்பாற்பட்ட உறவில் இருந்து வந்துள்ளார் என்பது தெரியவந்தது எனவும், எதிரி சுகஸ்ரீ யை எமாற்றியதால் அவர் மீது நடவடிக்கை எடுக்க கோரி காவல் நிலையத்தில் எதிரிக்கு எதிராக புகார் கொடுக்கப்பட்டது.

iv) எதிரிக்கு அவரது மாமன் முனியப்பன் என்பவர் தலைமையில் 2-வது திருமணம் நடைபெற்றது. மேற்படி முனியப்பனை எதிரி கிருஷ்ணன் குடும்ப நல நீதிமன்றத்தில் தாக்கல் செய்த OP No.180/2022 என்ற வாக்கில் ம.சா.2- ஆக விசாரிக்கப்பட்டு மேற்படி விபரங்கள் ஒப்புக்கொள்ளப்பட்டும், மேலும் கிருஷ்ணகிரி அனைத்து மகளிர் காவல் நிலைய காவல் ஆய்வாளரை விசாரிக்கப்பட்டு 2-வது திருமணம் குறித்து ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டதால் இவ்வழக்கு தள்ளுபடி

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.20 18:52:28 +0530

செய்யப்பட்டது. புகார்தாரருக்கு எதிராக விவாகரத்து கோரி கிருஷ்ணன் குடும்ப நல நீதிமன்றத்தில் OP No.51/2024 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

v) எனவே புகார்தாரருடன் சட்டப்பூர்வமான திருமணம் நடைமுறையில் இருக்கும்போதே புகார்தாரரை ஏமாற்றி, எதிரி 2-வது திருமணத்திற்கு அப்பாற்பட்ட உறவு புரிந்து, 1-வது திருமணம் நடைமுறையில் இருக்கும் போதே மோசடியான திருமண சடங்கை செய்த எதிரிக்கு U/s.82(2), 83 of BNS-ன் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3) எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u>**

i) புகார்தாருக்கும், எதிரிக்கும் திருமணம் நடைப்பெற்றது உண்மை எனவும், புகார்தாரரின் பெற்றோர்கள் சீர்வரிசையாக 20 பவுன் நகை போட்டதாக கூறுவது பொய்யான சங்கதி எனவும், MC No.03/2022. DVC No.01/2023-ல் தெரிவித்துள்ள சங்கதிகளும் முற்றிலும் பொய்யானவை எனவும், அதே சங்கதிகளை இம்மனுவில் தெரிவித்துள்தால் கரைபடிந்து எண்ணங்களுடன் தான். புகார்தாரர், எதிரி மீது பொய்யான சங்கதிகளை மிகைப்படுத்திக்கொண்டு எதிரிக்கு வீண் தொந்தரவு கொடுத்து வருகிறார் எனவும்.

ii) கிருஷ்ணகிரி, குடும்ப நல நீதிமன்றத்தில் எதிரி, புகார்தாரருடன் சேர்ந்து வாழ மனு தாக்கல் செய்து, அம்மனு OP No.188/2022 என்ற மனுவில் புகார்தாரர் எதிரிருடன் சேர்ந்து வாழ விருப்பமில்லாததால் மனு தள்ளுப்படி செய்யப்பட்டு சங்கதிகளை இம்மனுவில் குறிப்பிட்டும், புகார்தாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விரும்பபமில்லாமலும், குழந்தைகளை காண்பிக்காமல் அவருடைய விருப்பத்திற்கேற்ப செயல்பட்டு வருவததால் எதிரி மீது பல பொய்யான சங்கதிகளை மிகைப்படுத்திக்கொண்டு எதிரி பழி வாங்கும் நோக்கத்தில் செயல்பட்டு வருகிறார் எனவும்,

iii) எதிரி 2-வது திருமணம் செய்து கொண்டதாக கூறுவதும், காதலித்து வருவதாக கூறுவதும் மனுதாரருக்கு கற்பனையான கனவுகளில் நினைத்துக்கொண்டே வாழ்கிறார், அது போல் எந்த ஒரு தவறான பாதையில்

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.20 18:52:34 +0530

செல்லவில்லை என்றும், எதிரி மன வருத்ததுடன் இந்நீதிமன்றத்தில் தெரிவிக்கிறார் எனவும், புகார்தாரருக்கும் எதிரியின் மீது தொடர்ந்து பழி சுமத்துவதே எண்ணமாகும்.

iv) ஜீவனாம்ச மனுவிலும், டிவிசி மனுவிலும் தெரிவித்துள்ள சங்கதிளை எதிரி/ எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்த பிறகு மீண்டும் அதே சங்கதியை திரும்ப திரும்ப தெரியப்படுத்தி வருவது மனுதாரருக்கு தேவையற்ற மனு ஆகும் எனவும், எதிரி எந்த ஒரு தவறான பாதையில் செல்லவில்லை மனுதாரர் கூறுவது போல் 2-வது திருமணம் செய்துக்கொள்ளவில்லை. புகார்தாரர், எதிரிருடன் வாழாமல் நிராகரித்து வருவதால் கிருஷ்ணகிரி குடும்ப நல நீதிமன்றத்தில் விவாகரத்து வேண்டி திருமண மனு எண்.51/2024 என்ற மனு தாக்கல் செய்து அதில் பதிலுரை தாக்கல் செய்து மனுவினை நடத்த ஒத்துழைப்பு கொடுக்காமல் தேவையற்ற மனுவினை சென்னை உயர்நீதிமன்றத்தில தாக்கல் செய்து கடந்த 04.06.2025-ம் தேதி தள்ளுபடி செய்து விவாகரத்து மனு எண்.51/2024- ஐ விரைந்து முடிக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

v) புகார்தாரர் தாக்கல் செய்யதுள்ள மனுவிற்கு வழக்கு மூலம் இல்லை என்பதாலம், தேவையற்ற மனுவினை தாக்கல் செய்து எதிர்மனுதாரருக்கு வீண் தொந்தரவு கொடுத்து வருவதே புகார்தாரரின் கண நலன்களாகும், ஆகவே புகார்தாரர் தாக்கல் செய்துள்ள மேற்படி மனுவினை செலவவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு எதிரி தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

**5) தற்போது தீர்மானிக்கப்படவேண்டிய சங்கதி மனுதாரர்களின் மனு அனுமதிக்கதக்கதா? அல்லது இல்லையா? என்பதை ஆகும்.**

**தீர்வு**

i) மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே கடந்த 12.09.2018-ம் தேதி திருமணம் நடைபெற்றது என திருமண அழைப்பிதழ் வாயிலாக தெரியவருகின்றது. மேற்படி திருமணத்தின் பயனாக ஜானுஸ்ரீ மற்றும் லித்திஷ் என்ற இரண்டு

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.20 18:52:41 +0530

குழந்தைகள் பிறந்துள்ளார்கள் என குழந்தைகளின் பிறப்பு சான்றிதழ் வாயிலாக தெரிய வருகின்றது. எதிர்மனுதார் தரப்பில் மனுதாரர் இடையே ஏற்பட்ட திருமணத்தை மறுக்கவில்லை. மேலும் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் இடையே ஏற்பட்ட திருமணம் நிலுவையில் உள்ளதையும் மறுக்கவில்லை. மனுதாரர் தரப்பில் மாண்புமிகு குடும்ப நல நீதிமன்றம், கிருஷ்ணகிரி OP No.180/2022 தீர்ப்பின் நகலை ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு எதிர்மனுதாரர் மனுதாரருடன் சேர்ந்து வாழ வேண்டி பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் சுகஸ்ரீ என்ற பெண்ணை 2-வது திருமணம் செய்து கொண்ட காரணத்தினால் மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என தெரியவருகின்றது.

ii) எதிர்மனுதாரர், மனுதாரர் இடையே நடைப்பெற்ற திருமணம் நிலுவையில் உள்ள நிலையில். எதிர்மனுதாரர் 2-வது திருமணம் சுகஸ்ரீ என்ற பெண்ணுடன் செய்துகொண்டார் என முகாந்திரம் உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. மேலும் வழக்கை கோப்பை விசாரணைக்கு எடுத்து சாட்சிகளை விசாரித்தால் மட்டுமே உண்மை தன்னை தெரியவரும் என்பதால் வழக்கை கோப்பிற்கு எடுக்கலாம் என இந்நீதிமன்றம் மேற்கண்ட பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

7) எனவே **முடிவாக,** எதிர்மனுதாரர் மீது இதச பிரிவு 494 -ன் கீழ் கோப்பிற்கு எடுக்க உத்தரவிடப்படுகிறது. மனுதாரர் தரப்பில் செலுத்தப்படும் படி கட்டளையின் அடிப்படையில் எதிர்மனுதாரருக்கு அழைப்பானை அனுப்ப உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 20.05.2026 -ம் தேதியில் அவையறியப்பட்டது.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.20 18:52:46 +0530

குற்றவியல் நீதிதுறை நடுவர்

பாலக்கோடு